# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

---

*(2008 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

***2008. மாச்சு மாதம் 28 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது***

*இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை: ரூபா 8.00** **தபாற் செலவு: ரூபா 5.00**

## 2008 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. ஒ.– 17/2006

### 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 2008 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும், 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 6ஆ என்னும் பிரிவானது அதன் (1) ஆம் உட்பிரிவில், "முடிவுறுத்துதலிலிருந்து மூன்று மாதங்களுக்குள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "முடிவுறுத்துதலிலிருந்து ஆறு மாதங்களுக்குள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்கச் சட்டத்தின் 6ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6இ என்னும் பிரிவானது "6 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 6அ என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "6 ஆம் பிரிவின் அல்லது 6அ என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6இ என்னும் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "6 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் அல்லது 6அ என்னும் பிரிவின் கீழ்" என்னும்சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "6 ஆம் பிரிவின் அல்லது 6அ என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

2 –PL 002614 – 1,300 (2007/11)

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "6 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் அல்லது 6அ என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "6 ஆம் பிரிவின் அல்லது 6அ என்னும் பிரிவின் கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ; அத்துடன்

(இ) பிரிவின் ஓரக்குறிப்பில், "6 ஆம் பிரிவின் ஏற்பாடு களுக்கு" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "6 .ஆம் பிரிவின்கீழ் அல்லது 6அ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

5. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1.849 : ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்